[2002 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் பயனாளிகள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகளை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கெனப் புதிதாக நிலம் கையகப்படுத்தும் திட்டம் இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தபட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 243, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

243—

ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம்

***444—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயன்புரம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத் தலைமை மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை, அயன்புரத்தில் இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை எனக் கூறிக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அயன்புரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத் தலைமை மருத்துவமனையை, 1962 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, வடசென்னை பகுதியிலே நிரம்ப

2002 ஏப்ரல் 26]

தொழிற்பேட்டைகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே உருவாக்கினார்கள். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப் பின்பும், அந்த மருத்துவமனை விரிவுபடுத்தப்படாமலும், பெருகி வருகின்ற புதிய நோய்களிலிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்குப் புதிய சிறப்புப் பிரிவுகள் அங்கே உருவாக்கப்படாமலும் தொடர்ந்து அதே நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில், அந்த மருத்துவமனையில், சிடி.ஸ்கேன், கார்டியாலஜி அறுவை சிகிச்சைப் பிரிவு, கிட்னி அறுவை சிகிச்சைப் பிரிவு போன்ற சிறப்புப் பிரிவுகளை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அயன்புரத்தில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை 616 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் அனைத்து வகையான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் அருகில் அமைந்துள்ள 39 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மேற்பார்வை மருத்துவமனையாக இம்மருத்துவமனை செயலாற்றி வருகிறது. இம்மருத்துவமனையில் தற்போது அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் மற்றும் ஊடுகதிர்க் கருவிகள் உள்ளன. இம்மருத்துவமனைக்கென பிரத்யேகமாக ஒரு முழு உடல் பரிசோதனைக் கருவி வழங்க தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு வரும் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்குச் சிறப்பு மற்றும் உயர் சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் சூழலில் அவர்கள் சென்னை பொது மருத்துவமனை மற்றும் பிற கல்லூரி மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். சிறப்பு மற்றும் உயர் சிறப்பு அறுவைச் சிகிச்சையை அவசரமாக மேற்கொள்ளும் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் செலவிடும் மருத்துவச் செலவு மீள வழங்கப்பட்டு வருகிறது. சிறுநீரக, நரம்பியல் மற்றும் அவசரகால இதய நோய்ச் சிகிச்சைகள், பிரசவகால முன், பின் சிகிச்சைகள் உள்ளிட்ட அனைத்துச் சிறப்பு மற்றும் உயர் சிறப்புச் சிகிச்சை வசதிகளுடன் இம்மருத்துவமனையை முன்மாதிரி மருத்துவமனையாகச் செயல்படுத்த கருத்துரு ஒன்று புதுதில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு—

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்—மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக இயக்குநரால், 17-4-2001 அன்று அனுப்பப்பட்டு, அக்கருத்துரு இக்கழகத்தின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 244, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

244—

சுற்றுலாத் தலம்

***2106—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையை சுற்றுலாத் தலமாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதியாதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே ஏலகிரி மலை என்பது மிகப் பிரசித்திபெற்ற, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலம். அங்கே கோடைகாலங்களிலேகூட, கடுமையான கோடை இல்லாமல், குளிர் நிலவுகின்ற சூழ்நிலையெல்லாம் இருந்து வருகிறது. அது ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு இருந்தாலும்கூட, சுற்றுலாத் தலத்திற்குண்டான